தட்டு, திரும்பிவிட்டது!

பாரதி டெலிஃபோனைக் கீழே வைத்தாள். சற்று ஆத்திரத்துடன் படால் என்றுகூட வைத்தாள்.

அவள் கண்களில் நீர் திரையிட்டது. உணர்ச்சி வசப்பட்டு உதடு துடித்தது. 'இந்த அம்மாவும் ஓர் அம்மாவா? இப்படிக்கூட ஒரு பெற்ற தாயார் இருப்பாளா? பயமாக இருக்கிறது என்று சொன்னவுடனே பறந்து கட்டிக்கொண்டு ஓடி வர வேண்டாமா? எனக் கென்று இப்படி ஒரு பாசமில்லாத தாயாரா? அப்ப, கரிசனத்தோடு உருகினதெல்லாம் பொய்தானா? இதைவிட உரைகல் ஏது?' தனக்குத்தானே புலம்பிக் கொண்டிருந்தாள் அவள்.

முதல் நாள் இரவு. எங்கோ வெளியே போய் விட்டு வீடு திரும்பியபோது, கதவைத் திறந்து உள்ளே போனாள். ஏதோ

வித்தியாசமாகத் தோன்றியது. குழம்பிய மனத்துடன், படபடவென அடித்துக் கொள்ளும் இதயத் துடிப்புடன் அவள் கூடத்து விளக்கைப் போட்டாள். அவள் கண்ட காட்சி தூக்கிப் போட்டது. அவர்கள் படுக்கையறையின் அடுத்த அறையில் இரும்பு பீரோ, வாய்பிளந்து திறந்து கிடந்தது. அவள் திகிலுடன் ஏதும் யோசிக்கக் கூட இயலாத நேரத்தில் ஓர் ஆள் எங்கிருந்தோ கையில் கத்தியுடன் அந்த அறையிலிருந்து வெளிப்பட்டான். பீதியுடன் கைக் குழந்தையை இரண்டு அடி பின் வைப்பதற்குள் அவன் தெருக்கதவைத் திறந்து ஓடிவிட்டான். அவள் நடுக்க முற்ற குரலில் மாடியில் குடியிருப்பவர்களுக்குப் ஃபோன் செய்தாள். ஜன்னலருகில் சென்று முடிந்த மட்டும் உரக்க "திருடன், திருடன்" என்று கத்தினாள். கைக் குழந்தை அலறிற்று. முன் குழந்தை பாபு மிரண்டு நின்று விட்டான்.

அக்கம் பக்கத்து மனிதர்கள் ஓடி வந்தனர். அவள் நடந்ததைச் சொன்னதும் ஆளுக்கு ஒரு திக்கு மோட்டார் சைக்கிளிலும், நடந்தும் சென்று தேடினர்.

திருடன் தப்பி விட்டான்.

சற்று பின்தங்கி, கடையிலிருந்து சில சாமான்களை வாங்கி வந்த பாரதியின் கணவன் மூர்த்தி, தன் வீட்டின் முன் கூட்டமும் பேச்சுமாக இருப்பதைக் கண்டு விவரம் அறிந்தார். போலீஸ் வந்தது. கைரேகைகள் எடுத்தது. பலரும் பலவிதமாகப் பேசினர், அனுமானித்தனர். ஆறுதல் சொன்னார்கள். அன்று இரவு பாரதிக்குத் துணையிருந்தனர்.

திருடன் ஒரு ஜன்னலின் கம்பிகளை ராவி எடுத்துவிட்டு உள்ளே நுழைந்திருக்கிறான். நல்ல காலம் அவள் எடுத்து வைத்த விலையுயர்ந்த சாமான்கள் ஏதும் போக

வில்லை. பாரதியையோ குழந்தையையோ ஏதும் செய்ய வில்லை.

ஆனால் பாரதியின் குடல் நடுக்கம் குறையவில்லை. என்ன வெல்லாம் நடந்திருக்கலாம் என்று யோசித்து யோசித்து நடுங்கினாள். உடனே, மதுரையில் இருக்கும் தன் தாயைக் கிளம்பி வரும் படி டெலிஃபோன் செய்தாள்.

“நான் உடனே வரமுடியாது, கண்ணு. உன் அண்ணி பிரசவத்திற்காகப் பிறந்தகம் போயிருக்கிறாளே? வினோத் பள்ளிக்கூடம் போகவேண்டும். அப்பாவுக்கு உடம்பு சரியில்லை. அண்ணாவும் வெளியூர் போவான்போல. நான் இன்றே கோமளியை விமானத்தில் அனுப்பி விடுகிறேன். நீங்கள் போய் அவளை வீட்டுக்கு அழைத்துப் போங்கள். என்னைவிட அவள் உனக்குத் தக்க ஆதரவாக இருப்பாள். தைரியமாக இரு. வீட்டுக்கு பந்தோபஸ்து செய்யுங்கள்” என்று அம்மாவிடமிருந்து பதில் வந்தது.

பாரதிக்கு எரிச்சலாகவும் இருந்தது. அவள் தன் கணவரிடம் விவரம் கூறினாள். “உங்கள் அம்மாவை உடனே வரவழையுங்கள். இல்லையென்றால் நான் ஊருக்குப் போய்விடுகிறேன். பிறகு எத்தனை திருடன் களாவது வரட்டும், எதை வேண்டுமானாலும் கொள்ளை யடித்துக் கொண்டு போகட்டும்” என்றாள் அவள்.

“எங்க அம்மாவா? அம்மாவுக்குத் தைரியம் போதாது” என்று அடித்துக் கூறிவிட்டான் மூர்த்தி.

பொங்கிவரும் ஏமாற்றக் கண்ணீரை அடக்கிக் கொண்டாள் பாரதி. “உங்க அம்மா வர முடியாது. எங்க அம்மா வரமாட்டாள். கோமளியை அனுப்பறாளாம். நீங்க தான் ஏர்ப்போர்ட்டுக்குப் போய் அழைத்து வரணும்” என்றாள் அவள்.

"யாரு? அந்த 'டிராகுலா' வா? அது வந்து என்ன செய்யும்?" கலகலவென்று சிரித்தான் மூர்த்தி.

"அவளைப் பார்த்து திருடன் பயந்து ஓடலாமே?" என்றாள் பாரதி வெறுப்பும் விரக்தியுமாக.

மூர்த்தி "ஓஹோஹோ!" என்று சிரித்தார். உங்க அம்மா பலே ஆளும்மா!" என்றார்.

பாரதிக்கோ நகைச்சுவையை ரசிக்கும் மனமே இல்லை. குழந்தைகளைக் கவனிப்பதில் முனைந்தாள். எந்தச் சிறு ஓசையும் அவளை நடுங்க வைத்தது. நிசப்தமும் குடலை உலுக்கியது. அதற்காக அன்றாட வாழ்க்கை நின்று விடுவதில்லையே? அவரவர் அவரவர் அலுவல்களில் மூழ்கினர். பாரதியின் கணவரும் தன் அலுவலகம் சென்று விட்டார். எல்லா அறைகளையும் பூட்டிவிட்டு, சமைத்து நடுக்கூடத்தில் வைத்துக்கொண்டு அங்கேயே அமர்ந்து விட்டாள். வேலைக்காரியைத் தன்னுடனேயே இருக்கும்படிக் கெஞ்சினாள்.

"நான் எப்படிமா இருக்க முடியும்? உங்களுக்குப் பயமா இருந்தால் வேறே வீடு மாற்றிக் கொண்டு போய்டுங்க. எனக்கே பயம்மா இருக்கும்மோவ்! நீங்க என் கூடவே இல்லாட்டி நான் வீடு கூட்ட மாட்டேன். பாத்திரம் துலக்க மாட்டேன்" என்று சமயம் பார்த்து அவளும் பிகு செய்தாள்.

இரவு எட்டு மணிக்கு மூர்த்தி வீட்டுக்கு வந்தார். பாரதி எழுந்து போய் கோமளியை எதிர்கொண்டாள். மூடி போட்ட மூங்கிற் கூடை ஒன்றும், ஒரு படுக்கைச் சுருளுமாக கோமளி வண்டியிலிருந்து இறங்கி வந்தாள்.

"இந்த அம்மாளா உனக்குச் சொந்தக்காரங்க? வவுத்தைக் கலக்குது. பேயாட்டமா..." என்று தாழ்ந்த

குரலில் முணுமுணுத்தாள் வேலைக்காரி. அதை மறைப்பதற்காகவே பாரதி உரத்தக் குரலில் "வாங்க, வீட்டுச் சாமானை இப்படிக் குடுங்க. சமையற்கட்டிலே வைக்கலாம்" என்று ஒருவித போலி உற்சாகத்துடன் வாய் நிறையச் சிரிப்புடன் வரவேற்றாள்.

கோமளி பதிலுக்குச் சிரிக்கவும் இல்லை. கைக் சாமான்களையும் பாரதியிடம் கொடுக்கவும் மறுத்தபடி பின்னுக்கு இழுத்துக் கொண்டாள். பாரதி நிதானித்து சமையலறையைத் திறந்தாள். கோமளி மவுனமாக அந்த அறையில் ஒரு திண்ணை மீது வைத்தாள்.

கோமளிக்கு அப்படி ஓர் உருவம்! சாந்துக் கருப்பு, குட்டை உடல், தும்பப்பூ போன்ற தலை முடி, நெற்றி அகலம், மூக்கு சப்பை, தடித்த உதடுகள். கண்கள் ஊடுருவிப் பார்க்கும் தீட்சண்யமுடையது. வேலைக்காரி கூறியது போல குடல் நடுங்கத்தான் செய்யும்.

பாரதி ஓரக்கண்ணால் கோமளியை நோட்டம் விட்டாள். பிறகு சமையல் சாமான்களை மீண்டும் சமைய லறையிலேயே வைத்தாள்.

"சாப்பிடலாமா?" என்று உரக்கக் குரல் கொடுத்தாள் பாரதி.

"இதோ வரேன். பாபு தட்டச் சொல்கிறானே? தூக்கம் வருதாம். இதற்குள் அவனைத் தூங்க வைத்திருக்கக் கூடாதா?" என்று மறுமொழிந்தார் மூர்த்தி படுக்கையறை யிலிருந்து.

"அங்கேயெல்லாம் யார் போவார்களாம். இந்தக் கூடத்தை விட்டு நான் நகரவே இல்லை."

மூர்த்தி மகனைத் தோளில் சாய்த்தபடியே வெளியே வந்தார். "இங்கே சோபாவிலே படுத்துக்கோ ராஜா. நான்

சாப்பிட்டுட்டு வரேன்" என்று கூறி மகனை ஒரு சோபாவில் கிடத்தினார். பிறகு சாப்பாட்டு மேஜை முன் அமர்ந்தார். தட்டு வைத்து அவருக்குச் சாப்பாடு பரிமாற ஆரம்பித்தாள் பாரதி. வெளி வராந்தாவிலிருந்து வேலைக் காரி குரல் கொடுத்தாள். "அம்மா, நான் வூட்டுக்குப் போறேன்."

"ஏன், தாயீ, ராத்திரி துணை இருக்கேன்னியே?"

"போறேங்க" என்றாள்.

பாரதி வெளியே வந்து பார்த்தபோது அந்த அம்மாள் திரும்பி பாராமலேயே இருட்டில் மறைவது தெரிந்தது. சூள் கொட்டிக் கொண்டே பாரதி உள்ளே திரும்பினாள். தரையில் உறங்கிக் கொண்டு இருந்த குழந்தையும், சோபா மீது கிடந்த பாபுவையும் காணோம். கேள்விக் குறி யாகக் கணவன் பக்கம் பார்த்தாள் அவள். கண்ணிலேயே படுக்கையறைப் பக்கம் ஜாடை காட்டினார் மூர்த்தி. பாரதி அங்கே எட்டிப் பார்த்த போது கோமளி தரையில் அமர்ந்து, பாவுவைத் தன் மடியில் கிடத்தி தட்டிக் கொண்டிருந்தாள். ஒரு கை லேசாகத் தூளியை ஆட்டியது.

பாரதி, உதட்டைப் பிதுக்கியபடியே கணவனுக்கு உணவு தந்து முடித்தாள். பிறகு தன் தட்டை வைத்தாள். எழுந்து சென்று "வரீங்களா?" என்று மெதுவாகக் குரல் கொடுத்தாள். அந்தப் பயங்கர உருவக்கார கோமளி பாரதியை ஒரு பார்வை பார்த்து விட்டுத் தன் கூடையி லிருந்து ஒரு எவர்சில்வர் தட்டும் டம்ளரும் எடுத்துக் கழுவிக்கொண்டு வந்து தரையில் எதிரே வைத்தாள். பாரதி இருவருக்கும் சாப்பாடு பரிமாறினாள்.

இவ்வளவு நேரமும் ஒரு சிறு சத்தம்கூடச் செய்யாமல் எப்படித்தான் இந்த அம்மாளால் இருக்க முடி கிறது என்று வியந்தாள் பாரதி. 'போதும்' 'வேண்டாம்' என்பதற்குக் கூட சமிக்ஞைதான் செய்தாள்.

பாரதியால் பேசாமல் இருக்கவும் முடியவில்லை. என்ன, எப்படி பேச்சைத் துவங்குவது என்பதும் புரிய வில்லை. அவ்வப்போது கோமளியின் அவலட்சணமான முகத்தைக் கடைக்கண்ணால் பார்வையிட்டாள். இவள் நோக்கு தன் மீது படுவதுகூட உணராமல் கோமளி சாப்பாட்டிலேயே முனைப்பாக இருந்தாள். வெகு சீக்கிரமாகவே சாப்பாட்டை முடித்துக் கொண்டு தட்டைக் கையில் ஏந்தியபடி நின்றாள் கோமளி.

"சமையலறைக்கு அந்தண்டை ஒரு தாழ்வாரம் இருக்கு. அங்கே உள்ள குழாயில் கழுவுங்கள்" என்றாள் பாரதி.

கோமளி பரபரவென்று அப்பால் நகர்ந்தாள். பாரதி தன் உணவை முடித்துக் கொண்டு எழுந்து பார்த்தபோது சமையலறையில் தேய்க்க வேண்டிய பாத்திரங்களை ஒதுக்கி, மிச்சம் மீதியை சிறு கிண்ணங்களில் நிரப்பி மூடி வைத்து, காஸ் அடுப்பைச் சுத்தம் செய்து கொண்டிருந் தாள் அந்த அம்மாள்.

பாரதி ஏதும் பேசாமல் டி.வி.யின் முன் அமர்ந்தாள். கோமளி தன் படுக்கையைக் கையில் ஏந்தியபடி எதிரே வந்தாள்.

"இங்கேயே கூடத்தில் ஒரு பக்கமாகப் படுத்துக் கலாம்" என்றாள் பாரதி.

"வேண்டாம். பின்புறம் தாழ்வாரத்தில் படுக்கிறேன்" என்று கோமளி தாழ்ந்த குரலில் கேட்டாள்.

அப்போது பாரதிக்கு மின்சாரம் பாய்ந்தது போன்ற ஓர் இலேசான அதிர்ச்சி. தன் செவிகளை நம்ப முடிய வில்லை. முட்புதர் மண்டிய காட்டின் ஊடே சலசலக்கும் குடிநீர் ஓடை ஓடுவது போல அந்தக் கோமளியின் குரல்

பாரதியை ஆழ்த்தியது. சுருதி சுத்தமான புல்லாங்குழல் இசை கேட்பது போல இருந்தது. நீருண்ட கார்முகில் நடுவில் மின்னல் கொடி படர்ந்தது போல!

"இங்கே என்ன நடந்ததுன்னு அம்மா சொல்லையா? திருடனை இன்னும் கண்டுபிடிக்கலையே. ஊரிலே எங்கு பார்த்தாலும் திருட்டாம். திறந்த தாழ்வாரத்தில் படுக்கக் கூடாது."

"பரவாயில்லை. கதவை அடைச்சு என்னாலே படுக்க முடியாது" என்று தீர்மானமாகப் பதிலளித்துவிட்டு ஏறக் குறைய திறந்தபடி இருந்த தாழ்வாரத்தில் போய்ப் படுக்கை விரித்தாள்.

வேறு வழியின்றி அந்த அம்மாளை வெளியே விட்டு உட்புறம் தாளிடும்போது பாரதிக்குச் சங்கடமாக இருந்தது. தன் கணவனை நாடிச் சென்றாள். "இதோ பாருங்க, அந்தக் கோமளி வெளியிலேதான் படுப்பேன்னு பிடிவாதம் பிடிக்கிறாளே?" என்று முறையிட்டாள்.

"அங்கேயே இருக்கட்டும். ராத்திரி நாம் முழிப்பு வந்து பார்க்கும்போது பயப்பட வேண்டாம்." ரசித்து வாய் விட்டுச் சிரித்தார் அவர்.

பாரதி அதிருப்தியுடன் கணவனை நோக்கினாள்.

அவர் கலகலவென்று சிரித்தார். "இந்த வேதாளத் தைப் பார்த்தால் திருடன் ஓடிட மாட்டானா? அவனும் மனுஷன்தானே? அவள் புருஷனைக் கொன்றவள்னு உங்க அப்பா சொன்னாரே? உங்க அம்மா யோசிச்சு தான் அனுப்பியிருப்பா. மறுபடியும் அவள் ஜெயிக்குப் போகட்டும்னு திட்டமாக இருக்குமோ?" மீண்டும் ஒரு சிரிப்பு.

"நமக்கு ஒரு பொறுப்பு வேண்டாமா?" என்று கோப மாகக் கேட்டாள் பாரதி.

"நான் இனிமேல் உன்னை 'விக்ரம்'னு கூப்பிடலாம்னு பார்க்கிறேன். எப்படி?"

பாரதி சிரிக்கவில்லை. பேசாமல் படுத்துக் கொண்டாள். அவளுக்கு உறக்கமே வரவில்லை.

கோமளியின் கதை அப்படித்தான். கணவனைக் கொன்று விட்டுப் பன்னிரண்டு வருடம் ஜெயில் வாசம் செய்துவிட்டு வெளியே வந்தவள்தான். உள்ளூர் உறவினர் யாரும் அவளைத் தம் வீட்டில் சேர்க்கச் சம்மதிக்க வில்லை. அவளுக்காக வாதாடின வக்கீலான பாரதியின் தகப்பனார் தன் வீட்டோடு இருக்கச் சொல்லி விட்டார்.

"எதுக்கும்மா அப்பா ஒரு கொலைக் குற்றவாளியைக் கொண்டு வீட்டில் வைக்கிறார்" என்று பாரதியும் மற்ற குழந்தைகளும் அந்தச் சமயத்தில் கேட்ட நினைவு இருந்தது.

"அவள் நேர்மையானவள். தார்மீகமான கோபத்தில் தான் கொலை செய்தாள். அவள் புருஷன் தன் தங்கை யிடமே தகாத முறையில் நடக்க முற்பட்டானாம். அப்படிப்பட்ட நீசன் இந்த உலகத்திலேயே இருக்கக் கூடாது என்று அவள் தீர்மானித்து விட்டாள். உங்கள் அப்பாவுக்கு அவளிடம் நிரம்ப மரியாதை" என்று அப்பொழுது தாயார் கூறிய விளக்கமும் ஞாபகம் வந்தது.

புக்ககம் வந்துவிட்ட பாரதிக்கு கோமளியிடம் பழகும் வாய்ப்பு இல்லை. அவளைப் பற்றிக் கேட்டு அறியவும் தோன்றவில்லை. ஏதோ அட்டத்தில் கிடக்கும் பழைய சாமான்போல யார் மனசிலும் பதிந்தும் பதியாமலும் இருந்தாள் கோமளி.

பாரதி உறங்கிவிட்டாள். காலையில் விழிப்பு வந்த போது வெகு நேரமாகிவிட்டிருந்தது. வாரிச் சுருட்டிக்

கொண்டு எழுந்தாள் பாரதி. கூடத்து நாற்காலியில் அமர்ந்தபடி மூர்த்தி காப்பி அருந்துவதைப் பார்த்து வியந்தாள். சமையலறைப் பக்கம் கண்சாடை காட்டினார் மூர்த்தி. பாரதி அங்கு சென்றபோது, கோமளி வெகு நாட்கள் பழகியவள் போல் பாபுவுக்குப் பாலை ஊற்றிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். அவனும் சிரித்துச் சிரித்து என்னவோ பேசினான்.

பாரதி பல்லை விளக்கிக் கொண்டு வந்தபோது அவளுக்கும் காப்பி தயாராக இருந்தது. பாரதியைக் கண்டதும் பாபுவை இடுப்பில் இடுக்கிக் கொண்டு கொல்லைப் புறமாகச் சென்றுவிட்டாள் கோமளி.

பாரதி தன் கணவனிடம் சென்று, "என்னை எழுப்பவே இல்லையே? தூங்கியே போய்ட்டேன்."

" 'வேதாள்' பஸ்ட் கிளாஸ் காபி கொடுத்தது, விக்ரம்" என்றார் சிரித்தபடி.

"உஷ்! அவளுக்குக் காது கேட்கப் போகிறது. நீங்கள் தான் அவளுக்குக் கதவைத் திறந்தேளா?"

"ஆமாம். முன்பக்கமாக நம் பெட்ரூம் ஜன்னலண்டை வந்து, "பாபு, பாட்டிக்குக் கதவைத் திற" என்று குரல் கொடுத்தது. பாபுவா திறப்பான்? நான் கதவைத் திறந்துவிட்டு முன்பக்கம் வந்தேன். படுக்கவும் தோணலை. பேப்பர் வந்ததும் பிரிச்சு வச்சிட்டு உட்கார்ந்து கிடந்தேன். என் எதிரே சின்ன மேஜையைப் போட்டு டம்ளரில் காப்பி, டபரா, தவிர ஒரு கிண்ணத்தில் சர்க்கரை- எல்லாம் ஒரு டிரேயில் வைத்து எதிரே வைத்து விட்டுப் போனாள்."

பாரதியின் மனத்தில் நன்றி பெருக்கெடுத்தது. போய் பேசலாம் என்றாலோ நா எழவில்லை. கோமளியோ பாரதியின் முகத்தை ஏறிட்டுப் பார்க்காமல் பாத்திரம் தேய்க்க அமர்ந்து விட்டாள்.

“வேலைக்காரி வருவாள்” என்றாள் பாரதி. செவி கேட்டதா என்று கூடத் தெரியவில்லை. பாபுவின் மழலைக்குச் சிரித்துக் கொண்டிருந்தாள் கோமளி.

“பாபு கண்ணா, வாடா...” என்று பாரதி அழைத்தாள்.

“ஊகும்! நீ சமத்தா படுத்துத் தூங்கு. நானும் பாட்டியும் பத்து தேய்ச்சுட்டு வரோம்” என்றான் குழந்தை.

“பாட்டியாமே? ரொம்..ப்...ப பாட்டியைக் கண்டுட்டானாக்கும்?” என்று மனசுக்குள் முணுமுணுத் தாளே தவிர, உரக்க ஏதும் பேசவில்லை.

தெருப்பக்கம் சென்று வேலைக்காரி வருவாளா என்று காத்திருந்தாள்.

“வேலைக்காரிக்குப் பார்க்கறியா? அவள் இனிமேல் வேலைக்கு வரமாட்டாளாம். திருடன் நுழைஞ்ச வீட்டிலே வேலை செய்ய பயமாம்!”

“யார் சொன்னா?”

“அவளுடைய பிள்ளை வந்து சொல்லிட்டுப் போய்ட்டான். எல்லாம் நம்ப டிராகுலா தரிசனம் தான்! அவள் புருஷன் இவளைப் பார்த்துப் பயந்தே செத்திருப் பான்னு நினைக்கிறேன். நீ என்ன நினைக்கிறே. சும்மா வானாலும் உங்க அப்பா...” இடிச் சிரிப்புச் சிரித்தார் அவர்.

அந்த ஹாஸ்யம் பாரதிக்கு வெறுப்பூட்டியது. கவலை தோய்ந்த முகத்துடன் உள்ளே சென்று தண்ணீர் வாளியும், விளக்கு மாறும், கோலமாவு டப்பாவும் எடுத்து வந்து வாசல் தெளித்து முடித்தாள்.

பாரதியைப் பலவித உணர்ச்சிகள் மோதின. தன் தாயார் மீது ஆத்திரம் வந்தது. “தான் வந்து ஆறுதலாக இரண்டு பேச்சுப் பேசி தைரியத்தை வரவழைத்து

ஒத்தாசை செய்யாமல் பயங்கரமான ஒரு பொம்பளையை அனுப்பிவிட்டு வேடிக்கைப் பார்க்கிறாளே? இன்னிக்கு வேலைக்காரி பயந்து ஓடிட்டா. நாளைக்கு? யாருமே நம் வாசற்படியை மிதிக்க மாட்டார்களோ?" முணுமுணுத்துக் கொண்டே பாரதி உள்ளே சென்றாள்.

சமையலறையில் எல்லா பாத்திரங்களும் சுத்தமாகத் துடைக்கப் பெற்று அடுக்கியிருந்தன. பாபுவின் சிரிப்பொலி தோட்டத்தில் கேட்டது. எட்டிப் பாத்தாள். கோமளியின் முதுகில் 'உப்பு மூட்டை' விளையாடினான் பாபு. கோமளி பூப்பறித்து ஒரு கூடையில் போடுவது தெரிந்தது.

சமையலுக்கு வேண்டிய காய்கறி நறுக்கி வைத்தாள் பாரதி. கைக்குழந்தை சிணுங்கவும் அவள் அதைக் கவனிக்கச் சென்றாள். கோமளி உள்ளே வந்துவிட்டாள். பாபு அவள் கையைப் பிடித்து குளியலறைப்பக்கம் இழுத்துச் செல்வது தெரிந்தது. குழந்தைக்குப் பால் புகட்டி, தரையில் பாய் போட்டுக் குழந்தையைக் கிடத்தி விட்டு, பாரதி தன் படுக்கையறைப் பக்கமுள்ள குளியல் அறையில் தன் ஸ்நானத்தை முடித்து, சமையல் செய்ய முற்பட்டாள். சாதாரணமாக இருந்தால் பாபு அவளை எந்த வேலையும் செய்ய விடாமல் தொந்தரவு செய் திருப்பான். இப்பொழுது அவன் தன்னிடமே வராததும் அவளுக்குத் துக்கமாக இருந்தது.

கணவருக்குச் சிசுருஷைகள் செய்து அவரை வழி அனுப்பினாள் பாரதி. வீட்டில் நிசப்தம் நிலவியது. வேலைக்காரி இருந்தால் அவளிடம் ஏதாவது பேசுவாள் பாரதி. இப்பொழுது மவுனமாக இயந்திர பொம்மைபோல் வேலை செய்ய அவளுக்கு எரிச்சலாக இருந்தது.

கோமளிமீது குற்றங்கூற ஏதும் கிடைக்கவில்லை. வேலைக்காரி வரவில்லை என்று தெரிந்து தானாகவே

முன் வந்து எல்லா வேலைகளையும் துப்புரவாகச் செய்து முடித்தாள். ஆனால் பாரதியிடம் பேச்சு கொடுக்காமல் பாபுவைக் கேட்டே எல்லாமும் தெரிந்து கொண்டு செய்து முடித்தாள்.

இப்படியே ஒரு மாதம் ஓடிவிட்டது. பாரதிக்குக் கைக்குக் கை உதவுவதோடு நில்லாமல் சகல வேலை களையும் செய்து முடிப்பாள். தானும் எப்பொழுதும் சுத்தமாக இருப்பாள். வீட்டையும் சுத்தமாக வைப்பாள்.

ஒருநாள் பாரதி அவளிடம் வந்து, "கோமளி, நீங்க பாபுவைக் கூட்டிக்கிட்டுப் போய் மளிகைக் கடையில் சாமான் லிஸ்டு கொடுத்து விட்டு, வரும்போது துணி சோப்பு ஒன்று வாங்கி வாருங்கள்" என்றாள்.

"நான் கடைக்குப் போவதில்லை" என்று சுருக்கமாக மெதுவாகப் பதில் வந்தது. பிறகு ஒருநாள் விளையாட்டுப் பூங்காவுக்குப் போகவேண்டுமென்று பாபு அடம் செய்தான்.

"பாட்டியை அழைச்சிட்டுப் போடா, பாபு. பாப்பா நகர விடமாட்டேன் என்கிறது" என்றாள் பாரதி.

"நான் குழந்தையைப் பார்த்துகிறேன். அம்மாவையே கூட்டிட்டுப் போ, பாபு" என்று பட்டென்று பதில் வந்தது.

பாரதி பல்லைக் கடித்துக் கொண்டு குழந்தையைத் தூக்கிய படியே காலில் செருப்பு மாட்டிக் கொண்டாள். அப்போது எதிரே வந்து கை நீட்டி குழந்தையை வாங்கிக் கொண்டாள் கோமளி.

பாரதி பாபுவுடன் பூங்காவுக்குப் போய் வந்தாள். அங்கு தங்கள் குழந்தைகளை அழைத்து வந்த சில பெண்கள் பாரதியை மொய்த்தனர். "ஊரிலிருந்து துணைக்கு ஆள் வந்திருக்கிறாளாமே?" என்று குடைந்

தனர். கோமளியின் ரூபத்தைப் பற்றி வம்பு கிளம்பி யிருக்கும் போல.

சிலர் வீடு தேடி வந்து ஏதோ சாக்குச் சொல்லி வீடு பூராவும் நோட்டம் விட்டார்கள். பாரதிக்குத் தர்ம சங்கட மாக இருக்கும். ஆனால் கோமளி ஒரு நாள்கூட தெருவில் இறங்கியது இல்லை. யாரும் அவள் முகத்தைப் பார்த்தவர் களும் கிடையாது.

பாரதியின் தங்கைக்குக் கல்யாணம் நிச்சயமாகலாம் என்றும் பெண் பார்க்க வரும்போது உதவி தேவை யென்று கடிதம் வந்தது. பாரதியும் கோமளியும் மதுரைக்குக் கிளம்பினார்கள்.

பத்து நாட்கள் ஓடிவிட்டன. கல்யாணம் நிச்சயமாகி விட்டது. இரண்டு மாதம் கழித்துத்தான் முகூர்த்தம் என்றதும், பாரதி கிளம்பினாள்.

"அம்மா, கோமளி சாப்பாட்டுத் தட்டு அங்கேயே தங்கிவிட்டது. இப்ப எதில் சாப்பிடுகிறாள்?" என்று கேட்டாள் பாரதி.

"கோமளி இப்ப வாழையிலையில்தான் சாப்பிடு கிறாள். ஆனால் அவள் மறக்கவே மாட்டாளே? தன் தட்டை யாரும் தொடவிடமாட்டாள். வேறு ஒரு தட்டிலும் சாப்பிடமாட்டாள்."

"பாபுதான் எங்கோ ஒளிச்சுவச்சுட்டான். கிளம்பும் வரை தேடினோம். நேரமாகிவிட்டது என்று வந்து விட்டோம்" என்றாள் பாரதி.

"பரவாயில்லை. அவளைத் தான் உனக்குத் பிடிச்சிருக்கே? அவள் தட்டு அங்கே இருக்க வேண்டியது தானே?"

"அப்படித்தான் நான் நினைக்கிறேன். என்னோடேயே இருக்கட்டும். மாப்பிள்ளைக்கும் எழுதிவிட்டேன்" என்றாள் பாரதி.

"ஒத்துக்கிட்டாரா?"

"ஒப்புக்காமல் என்ன? என்ன ஆதரவு தெரியுமோ கோமளியிடம். நான்... நான் ஒரு பெரிய உண்மையைப் புரிஞ்சிண்டேன். உள்ளத்தோடு உள்ளம் பேச மொழியோ ஓசையோ தேவையே இல்லை. மனசை அறிஞ்சு முன் கூட்டியே செய்து வச்சுடுவாள். அந்த சங்கிதம் சொல்லு! பாபுவுக்கு எத்தனை பாட்டு, பஜனை, சுலோகம், கதை எல்லாம் சொல்லித் தந்திருக்கிறாள். தூளி ஆட்டும்போது 'பொன்னூசல்' பாடுவா பாரு, நான் சொக்கிப் போய்டுவேன். திருவாசகத்துக்கு உருகாதர் யார்னு சொல்லுவாளே...? அவள் சாப்பிடும் தட்டு அங்கேயே இருக்கட்டும் என்று திட்டவட்டமாகச் சொல்லி விட்டேன்" என்றாள் பாரதி ஒரே மூச்சில்.

நாட்கள் சென்றன. ஒருநாள் மூர்த்தி வந்தார். அன்றே ஊருக்குக் கிளம்பவேண்டுமென்றார். "பாரதி, நாலு மணிக்குத் தயாராக இரு. என் சிநேகிதன் வருவான். காரிலேயே போகலாம்" என்றார்.

அதைச் செவியுற்ற பாரதியின் தாயார், "கோமளி ரெடி" என்றாள்.

பாரதி பின் தாழ்வாரத்தை எட்டி நோக்கினாள். பயணத்துக்குச் சித்தமாக கூடையும் படுக்கையும் கட்டப் பெற்று காட்சி அளித்தன. கோமளியின் குரல் தோட்டத்தில் கேட்டது.

"பாரதி!" என்று மூர்த்தி அழைப்பது கேட்டு பாரதி அங்கு சென்றாள்.

திரும்பி வரும்போது அவள் கண்களில் நீர்திரை யிட்டது. "அம்மா, சாப்பாட்டுத் தட்டு திரும்பி வந்து விட்டதே?" என்றாள் தழுதழுக்கும் குரலில்.

"சரி!"

பாரதி சங்கடத்துடன் பின்புறம் எட்டிப் பார்த்தாள். கோமளி தன் மூட்டைகளைப் பிரிப்பது தெரிந்தது. எழுந்து வந்து பாரதியின் கையிலிருந்து தட்டை வாங்கி, தன் கூடைக்குள் வைத்தாள்.

கிளம்புமுன் பாரதிக்குத் தாம்பூலம் தந்தாள் அவள் அன்னை. அச்சமயம் பாரதியின் கண்களிலிருந்து ஒரு சொட்டு நீர் கன்னத்தில் வழிந்தது.

"அசடு! வெற்றிலை பாக்கு வாங்கும்போது கண்ணிலே ஜலம் விடலாகாது!"

"இல்லை, அம்மா. இந்த மட்டைத் தேங்காயைப் பார்த்ததும் கோமளி நினைவு வந்தது. மேலே காய்ந்து போய் அழுக்கு நிறமாக இருக்கிற இந்தத் தேங்காய்க்குள் வெண்மையும் இனிப்பும் இருப்பதை யார் நினைக் கிறார்கள்? ஏன், அம்மா. மனிதர்கள் உருவத்தையே எடை போடுகிறோம்? குழந்தை பாபு முதல் நாளே உள்ளத்தை இனங்கண்டு கொண்டானே? நாங்கள் மட்டும்..."

"உலகம் அப்படித்தான், கண்ணு. பாபு இன்னும் உலகத்திலே உழலத்தொடங்கவில்லையே?" என்றாள் தாய்.

(மலர் மல்லிகை)
